பாடம் 2

ஜூலை 6-12



# சிறந்த உலகிற்கான செயல்திட்டம்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *யாத் 3:7; மத் 22:37-40; யாத் 22:21-23; உபா 14:22-29; 26:1-11; லேவி 25:8-23.*

**மனன வசனம்:** பழிக்குப்பழி வாங்காமலும், உன் ஜனப்புத்திரர்மேல் பொறாமை கொள்ளாமலும், உன்னில் நீ அன்புகூருவதுபோல் பிறனிலும் அன்புகூருவாயாக; நான் கர்த்தர். லேவி 19:18.

தேவன் தமது இரக்கத்தால் மனிதர் உறவை விரும்புகிறார். உடைந்துபோன உறவை மனிதர்களுடன் புதுப்பிக்க தேவன் ஏங்குகிறார் என்பதை ஏனோக்கு, நோவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்றோரின் அனுபவங்களில் காண்கிறோம். குறிப்பாக இவர்களையும் இவர்கள் குடும்பத்தினரையும்மட்டும் ஆசீர்வதிப்பது தேவ நோக்கமல்ல. இவர்கள் தேவனோடு உறவுவைத்து, ஆசீர்வாதத்தைப் பெறும்போது, மற்றவர்களுடன் உறவைச் சீர்ப்படுத்தி, அந்த ஆசீர்வாதத்தை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வார்கள் என்பதே மகா திட்டம். 'நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும்' என்று ஆபிரகாமிடம் தேவன் சொன்னார். ஆதி 12:2,3. அவர் ஆசீர்வாதம் பெற்று, பிறருக்கும் ஆசீர்வாதம் தரவேண்டியிருந்தது.

இஸ்ரவேலர் மூலமாகவும், பிறகு அந்தத் தேசத்தில் பிறக்கவிருந்த மேசியா மூலமாகவும் ஆசீர்வாதம் வரவிருந்தது. இஸ்ரவேல் தேசத்தை உருவாக்கி, அவர்கள்மூலம் தேவன் செயல்பட்டார். கற்பனைகளை, சட்டத்திட்டங்களை, பண்டிகைகளை, நியமங்களைக் கொடுத்தார். அவற்றின்படி நடந்து, தேவ ஆசீர்வாதத்தைப் பெற்று, பிறருக்கு ஆசீர்வாதமாகத் திகழவேண்டியிருந்தது. இதே நியதி இன்றும் பொருந்தும்.

**ஞாயிறு** **ஜூலை 7**

# கேட்கிற தேவன்

*'எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்.' யாத் 3:7.*

கடுமையான அடிமைத்தனத்திலிருந்து மீள இஸ்ரவேலர் காத்திருக்க வேண்டியிருந்தது. தம் மக்களைச் சந்தித்து, அவர்களை எகிப்திலிருந்து விடுவிப்பதாக தேவன் வாக்குரைத்திருந்தார். சந்ததிகள் கடந்தன; அவர்களை ஒடுக்கின அந்தச் சிலைவழிபாட்டுக்காரரின் செல்வமும் அந்தஸ்தும் அதிகரித்தன; ஆனாலும், தேவன் அமைதியாக இருந்ததுபோல் தெரிந்தது.

பிறகு ஒரு விசேஷித்த விதத்தில், தனிமையான ஒரு வனாந்தரத்தில், மோசேக்கு தேவன் தரிசனம் தந்தார். அந்த மோசே தன் தலைமை வாய்ப்பை இழந்தவன்; பயந்து ஓடின இளவரசன்; எளிய மேய்ப்பன். தயங்கின மோசேக்கு தேவன் ஒரு வேலையைக் கொடுத்தார். அவன் இஸ்ரவேலரிடம் சென்று, தேவன் அவர்களுடைய கூக்குரலைக் கேட்டதாகவும், அவர்கள் சிறுமையைக் கண்டதாகவும் அறிவிக்கவேண்டும். உண்மையிலேயே தேவன் அவர்களைக் கண்டார். அற்புதமான விதத்தில் அவர்களுடைய சூழ்நிலையை மாற்றவிருந்தார்.

**கேள்வி: இஸ்ரவேலருக்கு தாம் செய்யவிருந்ததுபற்றி அவர்களிடம் தேவன் விளக்கமாகச் சொன்னதிலுள்ள முக்கியத்தும் என்ன? யாத் 3:16,17.**

---

அவர்களை ஒரு நல்ல தேசத்திற்குக் கொண்டுபோவதும், எகிப்தியரின் அடிமைத்தனத்திலிருந்து தப்புவிப்பதும்மட்டும் தேவநோக்கமல்ல. நூற்றுக்கணக்கான வருடங்கள் கடினமாக உழைத்து, எகிப்திய சாம்ராஜ்யத்தின் செல்வச்செழிப்புக்கு துணைபுரிந்தார்கள். பார்வோன் முதலில் எதிர்த்தாலும், இதுவரை இஸ்ரவேலர் உழைத்த உழைப்புக்கேற்ற பலனோடு வெளியேறுவார்களென்று மோசேயிடம் தேவன் உறுதிப்படுத்தினார். 'இந்த ஜனங்களுக்கு எகிப்தியரின் கண்களில் தயவு கிடைக்கப்பண்ணுவேன்; நீங்கள் போகும்போது வெறுமையாய்ப் போவதில்லை' என்றார். யாத் 3:21.

சிறுமைப்படுத்தப்பட்ட அனுபவத்தைப் பயன்படுத்தி, அந்த முன்னாள் அடிமைகளை ஒரு புதிய சமுதாயமாக ஏற்படுத்த தேவன் திட்டமிட்டார். வித்தியாசமான ஒரு வாழ்க்கை வாழ்ந்து, தழைத்தோங்குகிற ஒரு சமுதாயமாக அவர்கள் விளங்கவேண்டியிருந்தது. சுற்றிலுமுள்ள தேசத்தாருக்குமுன்மாதிரிகளாக, ஆபிரகாமைப்போலதேவனிடமிருந்து தாங்கள் பெற்ற ஆசீர்வாதத்தின்மூலம் உலகம்முழுவதிற்கும் ஆசீர்வாதமாகத் திகழவேண்டியிருந்தது.

தேவன் மக்களுடைய உபத்திரவங்களைக் காண்கிறார், அவர்களுடைய கூக்குரலைக் கேட்கிறார்; தேவனைப் பற்றிய என்ன உண்மை இதில் வெளிப்படுகிறது? யாத் 4:31.

**திங்கள்** ஜூலை 8

# பத்துக்கற்பனைகள்

**கேள்வி: யாத் 20:1-17இன் கற்பனைகளை இரத்தினச்சுருக்கமாக மத் 22:37-40இல் இயேசு சொல்கிறார்; ஒவ்வொரு கற்பனையையும் புரிந்துகொள்ள இது எவ்வாறு உதவுகிறது?**

பத்துக்கற்பனைகள் ஒரு தேசத்தின் அரசியலமைப்புச் சட்டம் போல உள்ளன. தேவன் தம் மக்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, அவர்களை ஒரு தேசமாக ஏற்படுத்தியதால், அவர்களுக்கான அடிப்படை நியதிகளாக அதைக் கொடுத்தார். தேவன்மேலும் பிற மனிதர் மேலும் அன்புடன் வாழ்வதற்கான சிறப்புக் கட்டளையாக அது இருந்தது. அதனால்தான் கிறிஸ்தவப் பாரம்பரிய நாடுகள் பல இந்த வழிகாட்டு நெறிகளின் அடிப்படையில் தங்கள் தேசச்சட்டங்களை அமைத்துள்ளன.

சுருக்கமாகச் சொல்லப்பட்டிருப்பதால், அவற்றின் பயனையும் பரந்துவிரிந்த நோக்கையும் குறைத்து மதிப்பிடமுடியாது. உதாரணமாக, 'கொலைசெய்யாதிருப்பாயாக' என்கிற ஆறாம் கட்டளையில் (யாத் 20:13) 'வாழ்க்கைக்கு கேடுவிளைவிக்கும் சகலவிதமான அநியாயங்களும்,' 'எளியவரைக் கவனிக்காமல் அலட்சியமாக இருப்பதும்' அடங்கும். அதுபோல 'களவு செய்யாதிருப்பாயாக' என்கிற கட்டளை (யாத் 20:15) 'அடிமைத்தனத்தைக் கண்டிக்கிறது; ஆக்கிரமிப்புக்கான போர்களைத் தடைசெய்கிறது.' 'கடன்களையும் சம்பளத்தையும் நியாயமாகக் கொடுக்கச்சொல்கிறது.' அதுபோல, 'பிறருடைய அறியாமை, பெலவீனம் அல்லது கஷ்டத்தைப் பயன்படுத்தி ஆதாயமடைவதைத்' தடைசெய்கிறது. - *EGW, PP, p 308, 309.*

நாம் நேரடியாகக் கொலைசெய்வதில்லை அல்லது திருடுவதில்லை. எனவே, நம்மைப் பார்த்தால் நமக்கு மோசமானவர்களாகத் தெரியாது. ஆனால், ஒரு சில செயல்களைச் செய்யாமல் இருப்பதால் நாம் கற்பனைகளின்படி நடந்துவிட்டதாகச் சொல்லமுடியாது. இயேசுவும் அதை உறுதிப்படுத்தியிருக்கிறார். மாறாக நம் எண்ணங்கள், நோக்கங்கள், கடமைதவறல்கள்கூட தேவனுடைய பிரமாணத்தை நாம் மீறின குற்றத்திற்குச் சமமாக இருக்கலாம். மத் 5:21-30.

எனவே ஒவ்வொருவரும் பத்துக்கற்பனைகளை ஏற்றுக்கொண்டு, அவற்றின்படி நடந்தால் எப்படியிருக்கும்! அப்படிப்பட்ட சமுதாயம் செயல்படுகிற சமுதாயமாக இருக்கும்; தேவன்மேலும், மனிதர்மேலும் உள்ள அன்பினால் ஒவ்வொருவரும் ஆர்வத்துடன் செயல்படுவார்கள்.

நாம் 'குறுகியபார்வையிலேயே' பத்துக்கற்பனைகளை வாசிக்கிறோம்; இந்த முக்கிய நியதிகளின் பரந்துவிரிந்த பயன்பாடுகளைக் காணத்தவறுகிறோம். இதற்குக் காரணம் என்ன? குறுகியபார்வையுடன் நடப்பது ஏன் எளிதாக இருக்கிறது?

## அடிமைகள், விதவைகள், திக்கற்றோர், அந்நியர்

**கேள்வி: இஸ்ரவேல் தேசத்தாருக்கு யாத் 23:9இல் தேவன் சொல்லும் செய்தி என்ன?**

சிறுமைப்படுதல், அடக்கப்படுதல், ஒதுக்கப்படுதல் போன்றவற்றை அனுபவித்து அறிந்தவர்கள் இஸ்ரவேலர்கள். இப்போது விடுதலை கிடைத்துவிட்டதால், தாங்கள் முன்பிருந்த நிலையையும், ஒதுக்கப்பட்டதையும், தாம் அவர்களை விடுதலையாக்கியதையும் அவர்கள் மறக்கக்கூடாதென தேவன் சொல்கிறார். அந்தச் சம்பவத்தை அவர்கள் மீண்டும் நினைவுகூருவதற்கே பஸ்கா பண்டிகையை ஏற்படுத்தினார். 'கர்த்தர் எங்களைப் பலத்த கையினால் அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப் பண்ணினார்.' யாத் 13:14.

**கேள்வி: தாங்கள் அடிமைத்தனத்தில் இருந்ததை நினைவுகூர்ந்து, புதிதாக அமைக்கப்பட்ட சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் இருந்தோரை அவர்கள் நடத்தவேண்டியிருந்தது; அது ஏன்? யாத் 22:21-23.**

---

பத்துக்கற்பனைகளைத் தேவன் கொடுத்து, சில நாட்களில் இஸ்ரவேலர் அதை மறந்துபோனார்கள்; இவற்றின்படி இஸ்ரவேலர் வாழவேண்டியவிதம்பற்றி விலாவாரியாகச் சொல்வதற்கு மோசேயை தேவன் அழைத்திருந்த சமயத்தில், இஸ்ரவேலர்கள் பின்வாங்கினார்கள். ஆசரிப்புக்கூடாரக் கட்டுமானம்பற்றிய அறிவுரைகளை வழங்குவதற்குமுன் அடிமைகளைச் சரியாகநடத்தவது போன்ற விஷயங்கள் குறித்த சட்டங்களைக் கொடுக்கிறார். அவை மூன்று அதிகாரங்களில் இடம்பெற்றுள்ளன. இஸ்ரவேலரை முன்பு எகிப்தியர் நடத்தினது போன்றுமற்றவர்களைஇ்ரவேலர்நடத்தக்கூடாதெனவலியுறுத்தினார். கொடுங்குற்றங்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களும், சொத்து சம்பந்தப்பட்ட சட்டங்களும், அனுதின வாழ்விற்கான சட்டங்களும், அந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்தி, நியாயம்வழங்குவதற்கான நீதிமன்றங்களை ஏற்படுத்துவதற்கான சட்டங்களும் கொடுக்கப்பட்டன. யாத் 21-23.

அந்தப் புதிய சமுதாயத்தில் சகநாட்டவர் சம்பந்தப்பட்ட சட்டங்களும், அந்நியர் மற்றும் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய நபர்கள் சம்பந்தப்பட்ட சட்டங்களும் கொடுக்கப்பட்டன. அவர்களைச் சிறுமைப்படுத்தக்கூடாது. அவர்களுடைய சுயமரியாதைக்குப் பாதிப்பு ஏற்படா வகையில் அவர்களுக்கு உணவுகிடைக்க வழிசெய்யவேண்டும். அதாவது, அறுப்பின்போது கதிர்களைச் சேகரிக்காமல் விடுவது போன்ற ஏற்பாடுகளால். அக்காலத்தில் 'வெளியாட்களையும்', அந்நியர்களையும் அவ்வாறு நடத்தமாட்டார்கள். பிறரை நடத்தும்விதம்குறித்த இதுபோன்ற ஒழுக்க நியதிகளை இன்று சிலர் மறந்தேபோனார்கள்.

---

உபத்திரவத்தில் உள்ளவர்கள் அல்லது அநியாயத்தைச் சந்திப்பவர்களை அக்கறையுடன் நடத்துவதற்கு உங்களுடைய வாழ்க்கையின் என்ன அனுபவம் உதவியாக இருக்கிறது?

# இரண்டாவது தசமபாகம்

தசமபாகம் கொடுப்பது பற்றி வேதாகமம் சொல்லும் அறிவுரைகளை பல கிறிஸ்தவர்கள் கைக்கொள்கிறார்கள். சுவிசேஷத்தை அறிவிக்கும்படி திருச்சபையைத் தாங்குவதற்காக வருமானத்தில் அல்லது 'பலனில்' 10 சதவீதத்தை விசுவாசிகள் கொடுக்கவேண்டும் என்பதற்கு பொதுவாக மல்கியா 3:10 ஐச் சுட்டிக்காட்டுவதுண்டு. தசமபாகத்தைச் சரியாகப் பயன்படுத்துவதற்கான கட்டுப்பாடுகளை சபை விதித்துள்ளது. நேரடி ஊழியத்திற்கும், சுவிசேஷ ஊழியத்திற்கும் அதைப் பயன்படுத்துமாறு சொல்லப்படுகிறது.

**கேள்வி: தசமபாகத்தின் முக்கிய நோக்கம்பற்றி உபா 14:22-29 வசனங்கள் சொல்வது என்ன?**

__________________________________________

__________________________________________

வருமானத்தில் 10 சதவீதத்தைக் கொடுத்ததும் கடமையைச் செய்துவிட்ட எண்ணம் வருகிறது. ஆனால் அந்த 10 சதவீதம் ஒரு ஆரம்பம்தான் என்று இஸ்ரவேலருக்கான அறிவுரை காட்டுகிறது. லேவியப்பிரமாணங்களின்படி வாழ்ந்து, கொடுத்திருக்கக்கூடிய இஸ்ரவேலர் ஒருவர், தேவ பணிக்கும், ஆசாரியர்களை ஆதரிப்பதற்கும், ஆசரிப்புக்கூடாரப் பணிக்கும், தரித்திரருக்கு உதவுவதற்கும் தன் ஆண்டு வருமானத்தில் நான்கில் ஒரு பகுதியைக் கொடுத்திருக்கக்கூடுமாம்.

குறிப்பாக அந்நியர்களுக்கும், திக்கற்றோருக்கும், விதவைகளுக்கும் கொடுக்கப்பட்ட தசமபாகத்தை இரண்டாம் தசமபாகம் என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். பிரயாசப்பட்டு, கிடைத்த பலன்களைவைத்து மக்கள் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும். புதிய தேசத்தில் அவர்களை ஆசீர்வதிப்பதாக தேவன் வாக்குரைத்திருந்தார். ஆனால் அந்த ஆசீர்வாதத்தை தாங்கள்மட்டும் அனுபவித்து, தங்களைப்போல ஆசீர்வதிக்கப்படாதோரை அவர்கள் மறந்துபோக தேவன் விரும்பவில்லை.

வருடந்தோறும், தங்கள் பலனில் தசமபாகத்தை ஆலயத்திற்கு எடுத்துச்சென்று, அங்கு அவர்கள் பகிர்ந்தளிக்க வேண்டியிருந்தது. ஆனால் ஒவ்வொரு மூன்றாம் வருடத்திலும், தங்கள் சமுதாயத்தில் உள்ளவர்கள்மேல் அக்கறைகாட்ட வேண்டியிருந்தது. அறுவடையின் பலன்களிலிருந்து லேவியருக்கும், அந்நியருக்கும், திக்கற்றோருக்கும், விதவைகளுக்கும் கொடுத்து, உதவவேண்டியிருந்தது. உபா 26:12.

மேலும், தங்கள் வருமானத்தில் ஒரு பகுதிமூலம், அதிக தரித்திரத்தில் இருந்தவர்களுக்கு பணஉதவியும், பிறஉதவிகளும் செய்யவேண்டியிருந்தது. இதையும்கூட தேவன் தங்கள்மேல் காட்டிய இரக்கத்தையும், நியாயத்தையும் நினைவுகூர்ந்தே அவர்கள் செய்யவேண்டியிருந்தது.

உபா **26:1–11**இல் ஆண்டவர் சொல்வது என்ன? எளியவருக்கு உதவிசெய்வதற்கு இந்த நியதி எவ்வாறு இன்று பொருந்தும்?

## யூபிலி வருஷம்

இஸ்ரவேலர் சொந்த தேசம் இல்லாது இருந்தார்கள். வாக்குத்தத்த தேசத்திற்குள் செல்ல ஆவலோடிருந்தார்கள். கானான் சென்று புதிய தொரு சமுதாயத்தை அமைக்கும்போது, நிலம் எவ்வளவு முக்கியமாக இருக்குமென்பது தேவனுக்குத் தெரியும். கோத்திரம்-குடும்பம்வீதமாக அந்தத் தேசத்தை ஓர் ஒழுங்குடன் பிரித்துக்கொடுக்குமாறு யோசுவா விடம் சொன்னார்.

நாட்கள் செல்லசெல்ல, நிலங்களை வைத்திருக்கும் ஒரு சிலரிடம் மட்டுமே செல்வமும் வாய்ப்பும் வளங்களும் சேருமென முன்னரே உணர்ந்திருந்தார். குடும்பக்கஷ்டங்கள், வியாதி, தவறான தீர்மானங் கள், இழப்பு போன்ற சூழ்நிலைகளில், உடனடி ஆதாயத்திற்காக அல்லது பிழைப்புக்காக நிலங்களை வைத்திருக்கிறவர்கள் அவற்றை விற்கக்கூடுமென்றும், பின்வரும் அவர்களுடைய சந்ததியார் அதனால் அந்த இடத்தைவிட்டே செல்லக்கூடுமென்றும் அறிந்திருந்தார்.

எனவே, நிலத்தை ஒரேயடியாக யாரும் விற்கமுடியாது என்று தேவன் தீர்வுசொன்னார். மாறாக, விற்கப்பட்ட ஒரு நிலம் அடுத்த 'யூபிலி வருஷம்' வரும்போது, அதை விற்ற குடும்பத்தாருக்கே சொந்த மாகிவிடும்; நிலத்தை விற்றவர்கள் அல்லது அந்தக் குடும்ப அங்கத் தினர்களுக்கு யூபிலி வருடத்தின்போது அந்த நிலம் மீண்டும் சொந்த மாகிவிடும். மக்கள் தம்முடன் வைத்திருக்கிற உறவைச் சார்ந்துதான், மற்றவர்களுடனான உறவு அமையும் என்பதை தேவன் மீண்டும் அவர் களுக்கு நினைவூட்டினார்: 'தேசம் என்னுடையதாயிருக்கிறபடியால், நீங்கள் நிலங்களை அறுதியாய் விற்கவேண்டாம்; நீங்கள் பரதேசி களும் என்னிடத்தில் புறக்குடிகளுமாயிருக்கிறீர்கள்.' லேவி 25:23.

**கேள்வி: லேவி 25:8-23இல் சொல்லப்படும் நியதிகளை, குறிப்பாக 'உங்களில் ஒருவனும் பிறனுக்கு அநியாயஞ்செய்யக்கூடாது' என்கிற அறிவுரையைக் கடைப்பிடித்தால், இன்று சமுதாயம் எவ்வளவு வித்தியாசமானதாக இருக்கும்?**

---

'சமுதாயச் சமநிலையை ஊக்குவிக்கும்விதத்தில் தேவன் ஒழுங் குகளை ஏற்படுத்தியிருந்தார். இடைப்பட்ட காலத்தில் சமுதாயத்திலும் தேசத்திலும் மறக்கப்பட்டுப் போனவற்றை ஓய்வுவருடம் மற்றும் யூபிலி வருடம் எனும் ஏற்பாடுகள் சரிசெய்தன.' - *EGW, PP, p 534.*

இந்தப் பொருளாதார, சமுதாய ஒழுங்குகளை எவ்வளவு காலத் திற்கு இஸ்ரவேலர் முழுவதுமாகக் கைக்கொண்டார்களெனத் தெரிய வில்லை. 2நாளா 36:21.

தேவசட்டங்களை முழுவதுமாகக் கைக்கொண்டால் உலகம் எப்படிப்பட்டதாக விளங்கும் என்பதை இந்தச் சட்டங்கள் காட்டுகின்றன. மேலும், ஒதுக்கப்பட்டோர்—தரித்திரர்மேல் தேவன் விசேஷித்த அக்கறைகாட்டுவதும்,மனிதர்களின் செயல்பாடுகளில்எல்லாம் நியாயம் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புவதை இது எவ்வாறு காட்டுகிறது?

# வெள்ளி ஜூலை 12

## மேலும் படிக்க:

‘மோசேமூலம் தேவன் தந்த பிரமாணங்கள் தேவனுக்கு மனிதர்மேல் உள்ள உரிமைகளை முதலில் வெளிப்படுத்துகின்றன. அடுத்ததாக, ஏழைகளைக் கனிவோடும்தயாளத்தோடும்நடத்தவேண்டுமென்பதைத்தான் வெளிப்படுத்துகின்றன. தேவன் தமது ஜனங்களை அதிகமாக ஆசீர்வதிப்பதாக வாக்குக்கொடுத்திருந்த போதும், அவர்கள்மத்தியில் வறுமையே காணப்படாது என்பது தேவனுடைய திட்டமல்ல. தேசத்தில் ஏழைகள் இல்லாமல் போவதில்லை என்று அறிவித்திருந்தார். பரிவும் கனிவும் தயவும் காட்டுகிறவர்களும் அவருடைய மக்கள் மத்தியில் எப்போதும் இருக்கவேண்டுமென அவர் விரும்பினார். இப்போது போலவே அப்போதும் வறுமை, வியாதி, சொத்து இழப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இருந்தார்கள். தேவன் கொடுத்திருந்த சட்டங்களைப் பின்பற்றின வரையிலும் அவர்கள் மத்தியில் பிச்சைக்காரர்கள் இருக்கவில்லை; உணவின்றி துன்புற்றவர்களும் இருக்கவில்லை.’ — *EGW, PP, p 530, 531.*

‘செல்வந்தர்போல ஏழைகளும் ஆசீர்வாதமாக இருப்பதற்கே இந்த ஒழுங்குகள் இருந்தன. இவை பேராசையையும் சுயத்தை உயர்த்துவதையும் கட்டுப்படுத்தி, தயாளகுணத்தை வளர்க்கவேண்டியிருந்தன. அனைத்து வகுப்பினருக்குள்ளும் நல்நினைவையும் நம்பிக்கையையும் வளர்ப்பதன்மூலம் சமுதாய ஒழுங்கைப் பேணி, அரசாங்கத்தை நிலைநிறுத்தவேண்டியிருந்தது. மனிதநேயம் எனும் கட்டமைப்பில் நம் எல்லாருக்கும் பங்கிருக்கிறது; மற்றவர் நலனுக்காக நாம் செய்வது எதுவாக இருந்தாலும், அது நம்மீது ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும்.’ – *p 534, 535.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *இஸ்ரவேலரின் சமுதாய அமைப்பு எப்படி இருக்கவேண்டுமென இஸ்ரவேலருக்கும் மோசேக்கும் தேவன் சட்டங்களைக் கொடுத்தார். அதில் எந்தச் சட்டம் அல்லது ஒழுங்கு உங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது? (அது இந்த வாரப் பாடத்தில் கொடுக்கப்பட்டதாகவோ, வேதாகமத்திலிருந்து நீங்கள் படித்ததாகவோ இருக்கலாம்.)*

2 *பாதிக்கப்படுகிற நிலையிலுள்ள மக்கள்மேலான அக்கறையின்பேரில் தேவன் முக்கியமாக சட்டங்களைக் கொடுத்தார்; அதற்குக் காரணம் என்ன?*

3 *இந்தச் சட்டங்களில் எவை, எவ்வாறு இன்றைய நிலைக்குப் பொருந்தும்? இஸ்ரவேலர் தங்கள் வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் கடைப்பிடிக்க வேண்டியிருந்த ஒழுங்குகளிலிருந்து நாம் என்ன முக்கிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளலாம்?*

**பாடச்சுருக்கம்: தேவன் எகிப்தில் இஸ்ரவேலரின் கூக்குரலைக் கேட்டு, அவர்களை மீட்டார். அனைவருக்கும் குறிப்பாக மறக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்களுக்கும் ஆசீர்வாதமாக விளங்கும் ஒரு புதிய சமுதாயத்தை அவர்கள்மூலம் ஏற்படுத்தவும், அவர்களோடு ஒரு விசேஷித்த உடன்படிக்கை உறவை ஏற்படுத்தவும் பிரயாசப்பட்டார்.**